**வானவில் கலையகம்**

உங்கள் இல்லத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் எதுவானாலும் சிறந்த முறையில் HD தொழில் நுட்பத்தில் போட்டோ பிடித்து நவீன தொழில்நுட்பத்தில் செய்து பெற்றுக்கொள்வதற்கும் -

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் Internet மூலம் உங்கள் நிகழ்வுகளை அதி உயர்தரத்தில் நேரடியாக Online Videoவில் பார்த்து மகிழ்ந்திடவும் -

**இன்றே நாடுங்கள்**

வானவில் கலையகம்
330, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
www.vanavilstudio.com
T.P.: 021 222 9466, 0772487550



10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
ethiroli

குரல் 01 அதிர்வு 60 சனிக்கிழமை ஜூலை 08 2017 ethirolimedia ... 00 48 48


# கிழக்கிலும் போட்டியிடுவோம்



## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவிப்பு

என்ன நோக்கத்துக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதாகக் கூறி போட்டியிட்டார்களோ அதிலிருந்து அவர்கள் விலகிவிட்டதால் அதே நோக்கத்துக்காக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஒக்ரோபரில் நடக்கவிருக்கும் கிழக்கு மாகாணசபை தேர்தலில் போட்டியிட உள்ளதாக அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு இளைஞர்கள் சிலரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலுள்ள விருந்தினர் தங்குமிட வளாகம் ஒன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் கேள்வி பதில் கலந்துரையாடல் நிகழ்வு ஒன்று நேற்று இரவு நடைபெற்றது. அங்கு அவரிடம், உங்கள் கட்சி மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடக்கூடும் என அண்மையில் குறிப்பிட்டிருந்தீர்கள் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவீர்களா எனக் கேட்ட

06

## மகாநாயக்கர்கள் பக்கச்சார்பு



மகாநாயக்க தேரர்கள் நடுநிலையாக செயற்பட வேண்டுமென தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா தெரிவித்துள்ளார். ஆட்சி பொறிமுறைமை உள்ளிட்ட நாட்டின் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் பீடங்களின் மகாநாயக்க தேரர்கள், நடுநிலையான கொள்கைகளை பின்பற்ற வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக பௌத்த மதத்துக்கு உரிய இடம் அளிக்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ள அவர் மகாநாயக்க தேரர்கள் ஒரு பக்கச்சார்பாக கருத்து வெளியிடுவது பொருத்தமாக அமையாது என குறிப்பிட்டுள்ளார்.
அம்பலாங்கொடை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (உ)

## நாடு பிளவுபடுவதை ஜே.வி.பி ஆதரிக்கிறது



அன்று நாட்டை பிளவுபடுத்தும் அரசமைப்பை கொண்டு வராதே என கூறிய ஜே.வி.பி இன்று மகா நாயக்கர்கள் என்ன கூறினாலும் நாட்டை பிளவுபடுத்தும் அரசியலமைப்பை கொண்டு வா என கூறும் அளவிற்கு ஜே.வி.பி மாற்றம் அடைந்துள்ளதாக பாராளுமன்று உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார். மாத்தளை விருந்தக கல்வி பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சல்லாப அரசாங்கமும், தவிக்கும் தாய் நாடும் என்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார். நான் ஜே.வி.பியில் இருந்தபோது அது நாடு பிளவுபடுவதற்கு எதிராகப் பாடுபட்டது. இன்று நாடு பிளவுபடுவதை அவர்கள் ஆதரிக்கிறார்கள் என்றார் அவர். (எ)

## நயினை அம்மனுக்குத் தேர்



வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினை நாகபூசணி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா இன்று சிறப்புற நடைபெற்றது.
காலை எட்டு மணிக்கு பெருந்திரளான பக்தர்களின் ஆரோகரா கோஷத்துடன் அன்னை வீதி உலா வருகை தந்தார். (உ)

## நிராகரிக்கிறேன்



முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் குற்றச்சாட்டை நிராகரிப்பதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். கோத்தபாய ராஜபக்ஷ, மல்வத்து அஸ்கிரி பீடாதிபதிகளிடம் தம்மை பற்றி செய்த முறைப்பாடு பொய்யானது என அவர் குறிப்பிட்டுள்ளார். கோதபாயவை ஒரு மாத காலத்துக்குள் கைது செய்ய உள்ளதாக தாம் கூறியதாக சுமத்திய குற்றச்சாட்டு பொய்யானது என அவர் தெரிவித்துள்ளார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கோத்தபாயவை கைது செய்ய உள்ளதாக தாம் குறிப்பிடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## 2 முஸ்லிம் எம்.பிக்கள் அரசில் இருந்து பிரிவு!

அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாகச் செயற்பட தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

06

## ஐ.எஸ் தாக்குதலை எதிர்கொள்ள தயார்!

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிர வாதிகளால் அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்ளக் கூடிய வாறு தயார் நிலையில் உள்ளதாக புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.
இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில்,
"இலங்கைக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அச்சுறுத்தல் இல்லை. சிலர் தமது நலனுக்காக இவ்வாறான வதந்திகளைப் பரப்பக்கூடும். எனினும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளால் இலங்கைக்கு அச்சுறுத்தல் ஏற்படுமெனில் அதனை எதிர்கொள்ள இலங்கையின் முப்படையினரும், பொலிஸாரும் தயாரான நிலையில் உள்ளனர்" என அவர் தெரிவித்துள்ளார். (அ)

## நீதிமன்றுக்கருகில் துப்பாக்கிச் சூடு

ஹம்பாந்தோட்டை நீதிமன்றுக்கருகில் துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இன்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். துப்பாக்கிப்

06

## நல்லாட்சி அரசாங்கம் நல்லிணக்கத்தையே முயற்சிக்கிறது



நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது என கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த பொகொல்லாகம தெரிவித்துள்ளார். நாட்டின் பல்வேறு முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி மக்கள் அளித்த ஆணையின் அடிப்படையில் புதிய அரசியல் சாசனமொன்றை அமைப்பதில் தவறில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். காணாமல் போனோர் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்துவதில் எவ்வித தவறும் கிடையாது என குறிப்பிட்டுள்ள ரோஹித்த பொகொல்லாகம சட்டம் நிறைவேற்றப்பட முன்னதாக மக்களின் கருத்துக்கள் அறியப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். (எ)

## வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்து

# வவுனியாவில் மோசடி!




வவுனியா கற்பகபுரம் கிராம மக்களிடம் முத்திரை ஒட்டப்பட்ட வெற்று பத்திரத்தில் கையொப்பம் பெற்று மோசடி இடம் பெற்று வருவதாக கிராம மக்கள் தெரிவிக் கின்றனர்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் பயனாளிகளுக்கு பணம் வழங் கும் குறிப்பிட்ட பத்திரம் வழங்கப்பட்டு அப்பத்திரங்கள் நிரப்பப்படாமல் முத்திரை ஒட்டப்பட்ட நிலையில் கையொப்பம் பெற்றுக்கொள்ளப்படுவதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

மீள்குடியேற்ற கிராமமான கற்பகபுரம் கிராமத்திற்கு அண்மையில் தேசிய வீட மைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் 360 வீடுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் குறிப்பிட்ட வெற்றுப்பத்திரத்தில் கிராம மக்களிடம் கையெழுத்து பெறுவதாகவும் இது தொடர்பாக கேள்வி கேட்பவர்களிடம் உங்கள் வீட்டுத்திட்டம் ரத்து செய்யப்படும் என மிரட்டப்படுவதாகவும் மக்கள் விசனம் வெளியிட்டனர். (உ)

## மன்னார் எழுத்தூர் குடிநீர் திட்டம்



மன்னார் மாவட்டம் எழுத்தூர் குடிநீர் வழங்கல் திட்டம் நேற்று பிரதமர் ரனில் விக் கிரமசிங்கவால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. 2,200 மில்லியன் ரூபா செலவில் நிர் மாணிக்கப்படும் இத்திட்டத்தின் மூலம், மக்களின் குடிநீர் வழங்கல் மேலும் விரிவு படுத்தப்பட்டு 59 ஆயிரம் மக்கள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

இலங்கையின் ஏற்றுமதி வருமானம் அதிக ரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித் துள்ளது.

இவ்வருடத்தில் முதல் நான்கு மாதங்களில் நாட்டின் ஏற்றுமதி வருமானம், 357 அமெரிக்க டொலர் வரை அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் இத்தொகையை ஒப்பிடுகையில் இது மூன்று தசம் 4 சதவீத அதிகரிப்பாகும். நாட்டின் 51 சதவீதமான ஏற்றுமதி அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, இத்தாலிய நாடுகளுக்கானதாகும் கடந்த ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் இலங்கை யின் ஏற்றுமதி வருமானம் 12 சதவீத அதிகரித் துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித் துள்ளது. (உ)

## வாகனக் கொள்வனவு, வீடு திருத்தம் 19 கோடிக்கு குறைநிரப்பு பிரேரணை

அமைச்சர்கள் சிலருக்கு வாகனங் களைக் கொள்வனவு செய்வதற்கும், மேலும் சில அமைச்சர்களின் உத்தி யோகபூர்வ இல்லங்களைப் புனர்நிர்மா ணம் செய்வதற்கும் 19 கோடியே 70 லட்சத்து 9 ஆயிரத்து 300 ரூபாவிலான மேலதிக தொகையொன்றைக் கோரி குறைநிரப்புப் பிரேரணையொன்று நேற்று சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அமைச்சர்கள் இருவருக்கும், பிரதி அமைச்சர் ஒருவருக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும், ஜனாதிபதி அலுவலகத்துக்கும் மற்றும் வெளிநாடு களிலுள்ள இலங்கைத் தூதுவராலயங் களுக்கும் புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 12 கோடியே 10 லட்சத்து 98 ஆயிரத்து 600 ரூபா இதன் கீழ் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை மகளிர் மற்றும் சிறு வர் விவகார அமைச்சரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தைப் புதுப்பிப்பதற் காக ஒரு கோடியே 48 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள், அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ் தலத்தை திருத்தியமைப்பதற்கு ஒரு கோடியே 30 லட்சம் ரூபாவும், பிராந் திய அபிவிருத்தி அமைச்சரின் உத்தி யோகபூர்வ இல்லத்தைப் புதுப்பிப்பதற் காக 2 கோடியே 18 லட்சத்து 25 ஆயி ரம் ரூபாவும் கோரப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (உ)

## பட்டதாரிகளுக்கு தொழிற்சந்தை

பட்டதாரிகளுக்கு ஏற்ற தொழிற் சந்தையொன்றை தயாரிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷான் வித்தானகே தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரை யாற்றிய போதே அவர் இந்த யோச னையை முன்வைத்தார். யோசனையை முன்வைத்து உரையாற்றிய அவர், அர சாங்கம் என்ற வகையில் கல்வி தொடர் பில் தேசிய கொள்கையொன்றை உரு வாக்க வேண்டும் என குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகத்தில் இருந்து வரும் பட்டதாரிகளில் விஞ்ஞான பாடவிதா னங்களை பின்பற்றியவர்களுக்கு தொழில் வழங்குவதில் பிரச்சினை இல்லை. பட்டம் பெறுபவர்களில் 60 வீதமானவர்கள் கலைத் துறை சார்ந்தவர்களாவர். அவர்களுக்கு தொழில் பெற்றுக்கொடுப்பதில் நெருக் கடி உள்ளது. அதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் குறிப் பிட்டார். (உ)

## ஆரம்பக் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை

ஆரம்பக் கல்வியை மேம்ப டுத்த பல முக்கிய வேலைத்திட் டங்கள் மேற்கொள்ளப்படும் என கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

முன்பள்ளிக் கல்வியை மேம்ப டுத்தும்முகமாக முறையான வேலைத்திட்டத்தை தயாரிப் பது தொடர்பாக கொண்டுவரப் பட்ட தனிப்பட்ட உறுப்பினர் யோசனைக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டார். (உ)

## இலங்கை வருகிறது நிபுணர் குழு



உமா ஓயா திட்டம் பற்றி ஆராய்வதற்கென ஜேர்மன், சுவிட்ஸர்லாந்து நிபுணர்கள் குழுவினர் அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளனர் என்று அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித் தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், "உமா ஓயா அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தற்சமயம் இடைநிறுத்தப்பட்டதோடு, இதனை முன்னெடுத்துச் செல்வது பற்றி நிபுணர்கள் குழுவின் பரிந்துரைக்கு அமைய தீர்மானம் எட்டப்படும். இவ்வாறான செயற்றிட்டத்தை இடைநிறுத்தி மீண்டும் ஆரம்பிக்கும் நடைமுறை இலங்கையில் மாத்திரமல்ல உலகின் பல்வேறு திட்டங்களுக்கும் நடந்துள்ளன. அவை இடைநிறுத்தப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன." என்றார். (உ)


மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848



K-AIMS BUSINESS SCHOOL

முற்றிலும் மாறுபட்ட இலகுவான சூழலில் உங்கள் ஆங்கிலப்புலமையை வளர்த்துக்கொள்ள

Diploma in spoken English @ K-AIMS BUSINESS SCHOOL

June மாத புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

T.P - 076 826 8211 / 076 826 8206

No 59 , Point pedro road, Ariyakulam , Jaffna




# மலாலாவின் முதல் ருவிட்

மிகக் குறைந்த வயதில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரும், பாகிஸ்தானின் பெண்கள் கல்வி ஆர்வலருமான மலாலா ருவிட்டரில் தமது முதல் ருவிட்டை பதிவு செய்துள்ளார். பாகிஸ்தானியரான மலாலா தற்போது பிரிட்டனில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். அங்கேயே தமது கல்வியையும் தொடர்ந்து வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று ருவிட்டர் பக்கத்தில் தமது முதல் ருவிட்டை பதிவு செய்துள்ளார் மலாலா. மட்டுமின்றி அவர் தமது முதல் ருவிட்டை பதிவிட்ட அரை மணி நேரத்துக்குள் ஒரு லட்சம் பின்தொடர்பவர்களையும் கடந்துள்ளார்.மலாலா கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதமே ருவிட்டரில் இணைந்திருந்தாலும், நேற்றுத்தான் தமது முதல் ருவிட்டை பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# 2000 பக்கத்தில் ஆதாரம்

விஜய் மல்லையாவின் நிதிமுறைகேடுகள் தொடர்பான சமீபத்திய தகவல்களுடன் கூடிய 2000 பக்க விரிவான ஆதார ஆவணத்தைப் பிரிட்டன் அதிகாரிகளிடம் இந்தியா அனுப்பியுள்ளது. இதனையடுத்து செப்ரெம்பர் 14ஆம் திகதி மதியம் 2 மணிக்கு விசாரணை நடைபெறுகிறது. முக்கிய வழக்கு டிசெம்பர் 4ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

டிசெம்பர் 4 வரை பிணையில் இருக்கும் மல்லையா கடந்த வியாழனன்று நடைபெற்ற விசாரணைக்கு நேரில் வந்திருந்தார், அப்போது, 'நாங்களும் எனது தரப்பு ஆதாரங்களை அளிப்போம்" என்று அவர் கூறியுள்ளார். (இ)

# அசிங்கப்பட்ட டிரம்ப்



போலந்து ஜனாதிபதியின் மனைவி அமெரிக்க ஜனாதிபதி டிரம்புக்கு கை குலுக்காமல் அவரின் மனைவி மெலேனியாவுக்கு முதலில் கைகுலுக்கிய வீடியோ வைரலாகி வருகின்றது.

ஜி-20 நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மனைவி மெலேனியாவுடன் சென்ற டொனால்ட் டிரம்பை, போலந்து ஜனாதிபதி கைக்குலுக்கி வரவேற்றார். தொடர்ந்து போலந்து ஜனாதிபதியின் மனைவி அகட்டாவுடன் கைக்குலுக்க டிரம்ப் தனது கைகளை நீட்டினார். இதனைக் கவனிக்காத அகட்டா, டிரம்பின் மனைவி மெலேனியாவுடன் கைக்குலுக்கினார்.இதனால் தர்மசங்கடத்துக்கு ஆளான டிரம்ப் செய்வதறியாது திகைத்து நிற்கும் வீடியோவே வைரலாகிக் கொண்டிருக்கிறது.(இ)

# சிறையில் மோதல் 28 கைதிகள் சாவு



மெக்ஸிகோ நாட்டில் உள்ள சிறைச்சாலையில் நிகழ்ந்த கலவரத்தில் 28 கைதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மெக்ஸிகோ சிறையில் அடைக்கப்பட்டிருந்த இரண்டு கும்பலுக்கிடையில் நேற்றுத் தகராறு ஏற்பட்டுள்ளது. தகராறு வன்முறையாக மாறியதைத் தொடர்ந்து இரு தரப்பினரும் பயங்கரமாக மோதிக்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் சிலர் தலை துண்டிக்கப்பட்டும், ஆயுதங்களால் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக 28 கைதிகள் இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். (இ)

# பிடிவாதம் கூடாது!



கட்டார் மீதான தடையை விலக்க முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை அந்த நாடு நிராகரித்துள்ளமை பிராந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என அரேபிய நாடுகளின் கூட்டணி வர்ணித்துள்ளது.


தீவிரவாதத்துடன் தொடர்பு எனக் குற்றஞ்சாட்டி கட்டாரைப் புறக்கணித்துள்ள நான்கு அரபு நாடுகளும் அந்த நாட்டின் பிடிவாதத்தை எச்சரித்து அறிக்கை வெளியிட்டுள்ளன. அதில், கட்டாரின் பிடிவாதத்தால் அந்த நாட்டுக்கு எதிராகப் புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரித்துள்ளன. ஆனால் என்ன நடவடிக்கை என்பதை அவை குறிப்பிடவில்லை. (இ)

# ஆண்களுக்கும் பிரசவ விடுமுறை

சுவிட்ஸர்லாந்து நாட்டில் மனைவியின் பிரசவகாலத்தின் போது கணவருக்கு ஊதியத்துடன் கூடிய 20 நாள் விடுமுறை வழங்க வேண்டுமென வலியுறுத்தி பொதுமக்கள் வாக்கெடுப்பில் ஈடுபட உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் பிரான்ஸ், சுவீடன், போலந்து, பின்லாந்து, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளில் மனைவியின் பிரசவகாலத்தின் போது கணவருக்கு ஊதியத்துடன் விடுமுறை வழங்கப்பட்டு வருகின்றது.

எனினும் ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து உள்ளிட்ட நாடுகள் கணவருக்கு ஊதியத்துடன் விடுமுறை வழங்குவதை நிராகரித்து வருகின்றன. இந்த முறைமையை மாற்றுமாறு கோரியே சுவிஸில் பொதுமக்கள் வாக்கெடுப்பை நடத்தவுள்ளனர். (இ)



# அயோத்தி ராமர் கோயில்: கட்டுமானத்துக்கு கற்கள்

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்காக, விஸ்வ இந்து பரிஷத் அமைப்பு சார்பில் 3 லொறிகளில் பிரமாண்டமான கற்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதுகுறித்து ராம் ஜென்ம பூமி பிரதிநிதி பிரகாஷ்குமார் குப்தா கூறும்போது, "ராமர் கோயில் கட்டுவதற்கு தேவையான பிரமாண்டமான கற்களை ஏற்கெனவே அயோத்திக்கு கொண்டுவந்தோம். ஆனால், இதற்கு அகிலேஷ் யாதவ் தலைமையிலான முந்தைய உத்தரப் பிரதேச அரசு கட்டுப்பாடுகளை விதித்தது. இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் மீண்டும் 3 லொறிகளில் கற்கள் கொண்டுவரப்பட்டுள்ளன" என்றார். (இ)

# செல்பி எடுத்து சிக்கிய ஸ்மார்ட்போன் திருடன்

ஸ்மார்ட்போனை வழிபறி செய்த திருடர்கள் அதில் செல்பி எடுத்து வசமாக மாட்டிக்கொண்ட சம்பவம் அரங்கேறியுள்ளது.

இச்சம்பவத்தில் திருடர்களை பிடிக்க கூகுள் டிரைவ் சேவை உதவியாக இருந்துள்ளது. இந்தியாவின் கான்பூரில் வீதியில் ஸ்மார்ட்போனில் பேசிக்கொண்டிருந்தவரிடம் ஸ்மார்ட்போனினை பறித்து சென்றவர்கள் அதில் செல்பி எடுத்துள்ளனர்.

இண்டர்நெட் இணைப்பு மற்றும் கூகுள் டிரைவ் பேக்கப் உள்ளிட்ட ஒப்ஷன்கள் ஒன் செய்யப்பட்டிருப்பதை திருடர்கள் அறிந்திருக்கவில்லை. தொடர்ச்சியாக செல்பி எடுத்த திருடர்களின் புகைப்படங்கள் அதன் உரிமையாளரின் கூகுள் டிரைவ் கணக்கில் தானாக அப்லோட் ஆகிவிட்டது. இவற்றை கொண்டு திருடர்களை கண்டுபிடிக்கும் முயற்சி தொடங்கப்பட்டுள்ளது. திருடர்களின் செல்பிக்கள் சமூக வலைத்தளங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரை செல்போன் திருட உதவியாக இருந்த இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ள நிலையில், செல்போன் வைத்திருக்கும் திருடனை பிடிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (உ)

# திடீர்ச் சந்திப்பு



ஜேர்மனியின், ஹாம்பெர்க் நகரில் நடைபெறும் ஜி-20 மாநாட்டில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் ,சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங்கும் சந்தித்துப் பேசியுள்ளனர். இவர்கள் இருவரும் அண்மையில் எல்லைப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை உள்ளிட்ட இருதரப்பு விவகாரங்களைப் பேசி ஆலோசனை நடத்தியதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

மத்திய வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் கோபால் பாக்லே தனது ருவிட்டர் பக்கத்தில் இந்தியப் பிரதமரும், சீன ஜனாதிபதியும் பலதரப்பட்ட விஷயங்களைப் பேசி உரையாடினர் என்று பதிவிட்டுள்ளார்.

இதே ருவிட்டர் பக்கத்தில் ஜின்பிங்கும் மோடியும் கைகுலுக்கிக் கொள்ளும் புகைப்படமும் வெளியிடப்பட்டுள்ளது. (இ)



# 3ஆவது சுற்றில் நடால், செரீனா

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் தொடரின் 3ஆவது சுற்றின் ஒற்றையர் பிரிவு போட்டிகளில் முர்ரே, ரபேல் நடால், வீனஸ் வில்லியம்ஸ் உள்ளிட்டோர் வெற்றி பெற்றுள்ளனர்.

நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் மூன்றாவது சுற்றுப் போட்டியில் பிரிட்டனின் முர்ரே 6-2, 4-6, 6-1, 7-5 என்ற சுற்றுக் கணக்கில் இத்தாலியின் பேபியோ போக்னினியை வீழ்த்தி நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.



மற்றொரு போட்டியில் தரவரிசையில் 4ஆவது இடத்தில் இருக்கும் ஸ்பெனின் ரபேல் நடால், 6-1, 6-4, 7-6 என்ற சுற்றுக் கணக்கில் ரஷ்யாவின் கசனோவை எளிதாக வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இப்பிரிவில் நடைபெற்ற ஏனைய போட்டிகளில் முன்னணி வீரர்களான சிலிக், முர்ரே ஆகியோர் வெற்றி பெற்று அடுத்தசுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர். 9ஆவது நிலை வீரரான ஜப்பானின் நிஷி கோரி, ஸ்பெனின் படிஸ்டா அகட்டிடம் தோல்வியடைந்து வெளியேறினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு போட்டியில் பத்தாம் நிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ், 7-6, 6-4 என்ற சுற்றுக் கணக்கில் ஜப்பானின் ஒசாகாவை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் கோன்ஜூ 3ஆவது சுற்றில் 8ஆம் நிலை வீராங்கனையான சிபுல்கோவாவை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார்.

இவர்கள் தவிர, பெண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்றுக்கு முன்னணி வீராங்கனைகளான கோண்டா, ஸ்விடோலினா, ஹெலெப் மற்றும் வோஸ்னியாக்கி ஆகியோரும் தகுதி பெற்றுள்ளனர். (ஐ)

## தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட்
# முன்னிலையில் இங்கிலாந்து



தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி பலமான நிலையில் உள்ளது.

இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் லோட்ஜில் நேற்று முன்தினம் தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, தொடக்க நாளில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 357 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

அணித்தலைவர் ஜோ ரூட் 184 ஓட்டங்களுடனும், மொயின் அலி 61 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்நிலையில் 2ஆவது நாளான நேற்று தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 458 ஓட்டங்களைக் குவித்தது.

அணித்தலைவராக அறிமுகமான இன்னிங்ஸிலேயே அதிக ஓட்டங்கள் குவித்த இங்கிலாந்து வீரர் என்ற சிறப்பை பெற்ற ஜோ ரூட் 190 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மொயின் அலி தனது பங்குக்கு 87 ஓட்டங்களையும், ஸ்டூவர்ட் பிராட் 57 ஓட்டங்களையும் சேர்த்தனர். தென்னாபிரிக்க சார்பாக, மோர்னே மோர்கல் 4 விக்கெட்டுகளையும், ரபடா, பிலாண்டர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

அடுத்து தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி, நேற்றையதினம் ஆட்ட நேரம் முடியும் போது, 68 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 214 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

புதுமுக வீரர் ஹெய்னோ குன் (1), ஆம்லா (29), டீன் எல்கர் (54), டுமினி (15), டி புரூன் (48) ஆகியோரின் விக்கெட்டுகளை இழந்தது. பவுமா (48), ரபடா (9) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

நேற்றைய நிலவரப்படி இங்கிலாந்து அணி 244 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்தது. இன்று மூன்றாம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது. (ஐ)

## உரும்பிராய் சென். மைக்கல் தொடர்:
# ஞானமுருகன் அபார வெற்றி

உரும்பிராய் சென்.மைக்கேல் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

நேற்று இரவு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அரியாலை ஐக்கியம் வியைாட்டுக் கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதியது.

இதில் சிறப்பாக ஆடிய ஞானமுருகன் அணி, 3-0 என்ற கோல்கணக்கில் வெற்றிகொண்டு அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றது.

ஞானமுருகன் அணி சார்பாக ஜெகன், தீபன், வகி ஆகியோர் தலா ஒரு கோல்போட்டனர். (ஐ)





# சிம்புவுக்கு சிக்கலான ‘பிக் பாஸ்’

நடிகர் சிம்பு தன் கனவுப் படமான ‘கெட்டவன்’ படத்தை விரைவில் தொடங்கவுள்ளார் எனச் செய்திகள் வந்துள்ள நிலையில், அந்தப் படத்திற்கு விஜய் டிவி நடத்திவரும் ‘பிக் பாஸ்’ நிகழ்ச்சியால் புதிய சிக்கல் வந்துள்ளது.

10 வருடங்களுக்கு முன்பே தொடங்கப்பட்ட இந்தப் படத்தில் நமீதா நாயகியாக நடித்துள்ளார். தற்போது அவர் ‘பிக் பாஸ்’ நிகழ்ச்சியில் உள்ளார், அதிலிருந்து அவர் வெளியில் வந்தால்தான் ‘கெட்டவன்’ படத்தில் நடிக்க முடியும்.

அதனால் படப்பிடிப்புத் தொடங்குவதில் சில மாதங்கள் தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.(ஒ)



# eBayஇல் பறக்கும் கார்




பறக்கும் கார் தொழில்நுட்பமானது முதன் முறையாக 2001ஆம் ஆண்டு வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது. Moller M400 Skycar எனும் இக்காரை Moller International எனும் விமான வடிவமைப்பு நிறுவனம் உருவாக்கியிருந்தது. எனினும் இதனை பறக்கச் செய்வதற்கான அனுமதியை வழங்க FAA அமைப்பு மறுத்துவிட்டது.

இருந்தும் தற்போது eBay தளத்தின் ஊடாக இந்த பறக்கும் கார் ஏலத்திற்கு விடப்பட்டுள்ளது. சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆரம்பத் தொகையாகக் கொண்டு ஏலம் விடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தி நேரடியாக கொள்வனவு செய்யமுடியும். இந்த விமானமானது எட்டு இயந்திரங்களை உள்ளடக்கியுள்ளதுடன் 720 குதிரை வலுவைப் பிறப்பிக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது. இதனை உருவாக்கும் திட்டத்துக்கு சுமார் 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விற்பனையில் அசத்தும் சீன நிறுவனம்

சீன ஸ்மார்ட் கைத்தொலைபேசிகளை நிறுவனமான சியோமி, இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மாத்திரம் 23.16 மில்லியன் ஸ்மார்ட் கைத்தொலைபேசிகளை விற்பனை செய்துள்ளது .

இது முந்தைய காலாண்டை விட 70 சதவிகிதம் அதிகம் ஆகும். சர்வதேச வியாபாரத்தில் முதலீடு, புதுவகை விற்பனை, ஆய்வு மற்றும் தயாரிப்புகளில் புதுமை உள்ளிட்டவைகளைச் செய்து இத்தகைய விற்பனையை சியோமி அடைந்துள்ளது.(ஒ)




# பெருமைப்படும் ‘வனமகன்’ நாயகி



“என்னைப் போன்ற மொழி தெரியாத புதுமுகத்துக்கு ஜெயம்ரவியுடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்ததை பெரிய அதிர்ஷ்டமாகக் கருதுகிறேன்” என சாயிஷா கூறியுள்ளார்.

இயக்குநர் விஜய் இயக்கிய ‘வனமகன்’ படத்தில் ஜெயம் ரவியுடன் ஜோடி சேர்ந்து தமிழில் அறிமுகமானவர் சாயிஷா. இவர் பிரபல ஹிந்தி நடிகர் திலீப்குமாரின் பேத்தி.

அடுத்து பிரபுதேவா இயக்கத்தில் விஷால்-கார்த்தி நடிக்கும் ‘கறுப்பு ராஜா வெள்ளை ராஜா’ படத்தில் நடிக்கிறார். வேறு சில படங்களில் நடிப்பது குறித்தும் பேச்சுகள் நடந்து வருகின்றன. (ஒ)

# இன்றைய கருத்தோவியம்




## வடக்கின் சுற்றுலாமையமாகும்
# மன்னார் மாவட்டம்



வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டம் பிரதான சுற்றுலா மையமாக மாற்றப்படவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது. பிரபலமான மடு தேவாலயம், வில்பத்து தேசிய பூங்கா உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பல்வேறு இடங்களை மன்னார் மாவட்டம் கொண்டிருக்கிறது. மேலும் சுற்றுலாப் பயணிகளை கவரும் பல இடங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் மாவட்டமாக, மன்னாரை மாற்றும் வகையில், பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கடற்கரையுடன் இணைந்த 300 ஏக்கர் பகுதி அடையாளம் காணப்பட்டு, சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்தப் படவுள்ளன. (உ)

## பல்கலைக்கழகங்களை
# விற்கமாட்டோம்

கொழும்பு பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றை தனியார் துறைக்கு வழங்கும் நோக்கம் எதுவும் அரசாங்கத்துக்கு இல்லை என்று நெடுஞ்சாலைகள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயர்கல்வி தொடர்பான தனிநபர் பிரேரணையில் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ உரையாற்றினார். அவர் தனது உரையில் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து அகற்றி, அவற்றை இலாபமீட்டும் சுயாதீன நிறுவனங்களாக மாற்றவிருப்பதாக செய்திகள் வெளியாகியிருப்பதாக சுட்டிக்காட்டினார். இதற்கு பதிலளிக்கையிலேயே உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல இவ்வாறு குறிப்பிட்டார். (உ)

## நூல் வெளியீடுகள்

ப.தெய்வீகனின் "காலியாக்கப்பட்ட நாற்காலியில் அமர்ந்திருக்கும் புலி" என்ற அரசியல் பத்திகள் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 03.30 மணிக்கு யாழ்ப்பாணம் திருமறை கலாமன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

* * *

ந.யோகேந்திரநாதனின் "நீந்திக் கடந்த நெருப்பாறு" நூலின் பாகம் 02 நூல் அறிமுக விழா இன்று பிற்பகல் 03.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ)

## இலங்கையில் கால்வைக்கும்
# சீன வங்கி




சீனாவின் மிகப் பெரிய நிதி நிறுவனங்களில் ஒன்றான சீன வங்கி (Bank of China), கொழும்பில் கிளை ஒன்றை இந்த ஆண்டில் ஆரம்பிக்கவுள்ளது. இது தெற்காசியாவில் சீன வங்கியின் முதலாவது கிளையாக இருக்கும் என்று அந்த வங்கியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். கொழும்பில் சீன வங்கியின் கிளையைத் திறப்பது தொடர்பான செயல்முறைகள் குறித்து வங்கி அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர். 90 மில்லியன் டொலர் முதலீட்டுடன் கொழும்பில் சீன வங்கிக் கிளை ஆரம்பிக்கப்படும் என்று சீனத் தூதரக பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். சீனாவுடனான இலங்கையின் நிதிப் பரிமாற்றங்களுக்கு இந்த வங்கி உதவியாக அமையும் என கூறப்பட்டுள்ளது. (உ)

## இந்தியாவிடம் வாங்கும் ஆழ்கடல் ரோந்துக் கப்பல்





இந்தியாவிடம் வாங்கப்படும் பாரிய ஆழ்கடல் ரோந்துக் கப்பலை செலுத்தும் பயிற்சிகள் மற்றும் சோதனைகளில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டுள்ளதாக அனைத்துலக பாதுகாப்பு ஊடகமான "ஜேன்ஸ் 360" செய்தி வெளியிட்டுள்ளது. இந்தியாவிடம் இருந்து இலங்கைக் கடற்படைக்கு 105 மீற்றர் நீளம் கொண்ட இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் வாங்கப்பட்டுள்ளன. தற்போது கோவா சென்றுள்ள இலங்கைக் கடற்படை அதிகாரிகள், இந்தக் கப்பலைச் செலுத்தும் பயிற்சிகளை மேற்கொண்டு, இதிலுள்ள கருவிகளைப் பயன்படுத்தும் முறைகளை அறிந்து வருகின்றனர். 18 அதிகாரிகள் உள்ளிட்ட 118 கடற்படையினர் இதில் பணியாற்றுவர். ஒரு உலங்குவானூர்தி தரையிறங்கும் வசதியைக் கொண்ட இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல், 4500 மைல்கள் வரை சென்று ரோந்துப் பணியில் ஈடுபடக் கூடியதாகும். (உ)

### தேரத்திருவிழா




உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெற்றது.



# பிறக்காத குழந்தைக்கு
## சோதிடம் பார்க்க வேண்டாம்

பிறக்காத குழந்தைக்கு ஏன் சோதிடம் பார்க்கிறீர்கள் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவிடம், மல்வத்த பீடத்தின் அனுநாயக்க தேரர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் கேள்வி எழுப்பியுள்ளார். இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச நேற்று கண்டியில் மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்தார். தம்மைக் கைது செய்வதற்கு அரசாங்கம் முற்படுவதாக அவர் மகாநாயக்க தேரர்களிடம் முறையிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், கோத்தபாய ராஜபக்சவிடம் மல்வத்த பீடத்தின் அனுநாயக்க தேரர், அரசியலமைப்புத் தொடர்பாகக் கூட்டு எதிரணியினர் வெளியிடும் எதிர்ப்புக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். 'உத்தேச அரசியலமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது எந்த அடிப்படையும் அற்றது. இது பிறக்காத குழந்தைக்கு சோதிடம் பார்ப்பது போன்றது. அரசியலமைப்பு வரைவு ஒன்று உருவாக்கப்படாத நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளியிடுவது அர்த்தமற்றது. நாடாளுமன்றத்தில் தினேஸ் குணவர்த்தன ஆவேசமாக ஆற்றும் உரைகளை நான் கவனித்து வருகிறேன் என்றும் அவர் கூறியுள்ளார். (உ)

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு:
021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com



## நாளை நாளும் கோளும்

09.07.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 25ஆம் நாள்

| | | |
|---|---|---|
| பூரணை மு.ப. 10.12 வரை | பூராடம் மாலை 05.48 வரை | சித்தாமிர்தயோகம் |
| இராகுகாலம் 04.28–05.58 | சுபநேரம் 08.58–10.28 | எமகண்டம் 11.58–01.28 |

கோயிலுற்சவம்: சதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர், கொக்குவில் அதிகாளியம்பாள், கோப்பாய் வடக்கு பாலாணை கண்ணகையம்மன்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குழப்பம் | வீண்செலவு | திறமை | யோகம் | வாழ்வு | பாசம் | சந்தோசம் | களிப்பு | ஜெயம் | சாந்தம் | சோர்வு | பொறுமை |

## அந்த நாள் ஞாபகம்......!



### 1985 .07.08

இலங்கை அரசுக்கும், ஈழ விடுதலை அமைப்புகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

## அடிக்கல் நாட்டுவிழா



இந்திய அரசின் 20 மில்லியன் நிதியுதவியுடன், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் அமைக்கப்படவுள்ள விளையாட்ட ரங்கத் தொகுதிக்கான அடிக்கல்நாட்டுவிழா இன்று நடைபெற்றது. நிகழ்வில் இந்திய துணைத் தூதர் நடராஜன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.கர்வேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ–11)



# சட்டவிவகாரங்களில் தலையிடுவதில்லை

சட்ட விவகாரங்களில் தாம் தலையீடு செய்வதில்லை என சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்குத்துறை அதிகாரிகள் சுயாதீனமாக இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் எவ்வித அரசியல் தலையீடுகளும் பிரயோகிக்கப்படுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களிடம் எதனையும் மறைக்க வேண்டிய அவசியம் எதுவும் தமக்கு கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். தமக்கு வேறு ஓர் அமைச்சு வழங்கப்பட்டாலும் அதனையும் பொறுப்புடன் செயற்படுத்த தயாராக உள்ளதாக தெரிவித்த சாகல , பதவி வழங்குவது ஜனாதிபதியினதும் பிரதமரினதும் பொறுப்பு என குறிப்பிட்டுள்ளார். (உ)

## சிதம்பராக் கல்லூரி பரிசளிப்பு விழா

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி அதிபர் எஸ். குருகுலலிங்கம் தலைமையில் நாளை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக வட மாகாண அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

**2 முஸ்லிம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது பிரதேச மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலைமை உள்ளதன் காரணமாக அவர்கள் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக அரச அதிகாரிகள் கவனத்தில் எடுக்காமை காரணமாக அதிருப்தியடைந்துள்ள அந்த இரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.(ஆ)

**நீதிமன்றுக்கருகில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரயோகத்திற்குள்ளான நபர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை. மோட்டார் சைக்கிளில் வந்த குழுவொன்றே இந்த துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (எ)

**கிழக்கில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வடக்கு மகாணசபைத் தேர்தல் நடைபெற முன்னர் சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்குமிடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றிருந்தது. அங்கு மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடவேண்டாம். அது கொள்கைகளுக்கு முரண்பாடாக அமையும் எனக் கூறினோம்.

“நாங்கள் போட்டியிடாதுவிட்டால் அரச ஆதரவுபெற்ற டக்ளஸ் தேவானந்தா மாகாண சபையைக் கைப்பற்ற வாய்ப்பாகிவிடும். அவர் வந்தால் மாகாணசபை ஊடாக ஏதோ பெரிதாக செய்யமுடியும் என ஒரு மாயையை வெளி உலகத்திற்கு இந்த அரசாங்கம் காட்டிவிடும் எனவே போட்டியிடவேண்டும்” என கூட்டமைப்பினர் கூறினார்கள். அப்போது நாம் மாகாணசபை முறையை ஏற்கமாட்டோம் எனும் வாசகத்தையாவது விஞ்ஞாபனத்தில் முன்வையுங்கள் என்றோம். அவர்கள் அதையும் ஏற்கவில்லை.

ஆனால் தற்போது என்ன நோக்கத்திற்காக தாங்கள் போட்டியிடுகின்றோம் எனக் கூறி போட்டியிட்டார்களோ அதிலிருந்து அவர்கள் விலகிவிட்டார்கள். தற்போது அவர்கள் அரசுடன் இணைந்து மாகாணசபையால் எல்லாம் செய்ய முடியும் என்ற ஒரு மாயையை உருவாக்குகிறார்கள். இதனை அம்பலப்படுத்தவேண்டும் என்றால் நாங்களும் களமிறங்க வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. எனவே கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடப் போகின்றோம் என்றார் அவர்.

இதேவேளை தனித்துப் போட்டியிடுவதா? அன்றில் கூட்டணி ஒன்றினை அமைத்துப் போட்டியிடுவதா என்பது தொடர்பில் இன்னமும் முடிவாகவில்லை எனத் தெரிவித்த கட்சியின்செயலாளர் கஜேந்திரன், அது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளார். (எ)

## பாடசாலை இயங்கும்

கொக்குவில் இந்துக்கல்லூரியின் கற்றல் செயற்பாடுகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை வழமைபோன்று நடைபெறும் என கல்லூரியின் அதிபர் எஸ். லோகேஸ்வரன் தெரிவித்தார்.

புதிய அதிபர் நியமமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தப்போவதாக முன்னதாக அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புதையல் தேடிய இருவர் கைது!



திருகோணமலை - கிண்ணியா மகா மாரிக்குளம் பகுதியில் புதையல் எடுத்த குற்றச்சாட்டின் அடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிண்ணியாப் பொலிஸாரின் பெருங்குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், மகா மாரிக்குளம் பகுதிக்கு விரைந்த பொலிஸார் அந்தப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை வழி மறித்து விசாரித்துள்ளனர்.

இதன்போதே, அவர்களிடமிருந்து விநாயகர் சிலை, இரு சிறு பெட்டகங்கள், தங்கத் தோடுகள் மற்றும் அவற்றை எடுப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

K-AIMS BUSINESS SCHOOL

ACCA

விண்ணப்பம் கோரல்

ACCA
(Association of Chartered
Certified Accountant)

June மாத புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

T.P - 076 826 8208 / 076 826 8206

No 59 , Point pedro road, Ariyakulam , Jaffna

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 08.07.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.